Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 1, 2021

திங்கட்கிழமை நவம்பர் 01, 2021 | ஒளி: 07 கதிர்: 141 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பதவி நீக்கப்படுவார்களா?

அமைச்சரவையின் ஒற்றுமையை சிதைத்து, அமைச்சரவைத் தீர்மானங்களை பகிரங்கமாக விமர்சித்த அமைச்சர்களை, அந்தந்த அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குமாறு, ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைப்பது தொடர்பில், ஆளுங்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவை தீர்மானங்களை பகிரங்கமாக விமர்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் பதவிகளிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### விகிதாசாரத் தேர்தல் முறைமை மீதே

# சிறுபான்மை கட்சிகள் உடும்புப்பிடி




### ஜே.வி.பி வராமைக்கு மனோ வருத்தம்

விகிதாசாரத் தேர்தல் முறையில் உறுதியாக நிற்கவும், அதை மாற்றும் எந்தவொரு முயற்சியையும் எதிர்ப்பதற்கும் 7 சிறுபான்மைக் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## தடுப்பூசிகளைத் தகர்க்கும் புதிய கொரோனா திரிபு

### உஷார் நிலையில் இலங்கை



ஃபைசர் மற்றும் அஸ்ராஸெனகா உட்பட அனைத்து முக்கிய தடுப்பூசிகளின் பாதுகாப்பையும் தகர்க்கக் கூடிய கொவிட் வைரஸ் திரிபான A30 தொடர்பில், இலங்கை அதிக எச்சரிக்கையுடன் இருப்பதாக அறியமுடிகிறது.

உலகம் முழுவதும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் இந்த வைரஸ் மாறுபாடு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன,

தொடர்ச்சி P2

### 'ஒரே நாடு, ஒரே சட்டம்' செயலணி

## நீதியமைச்சர் அலிசப்ரி அதிருப்தி



பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்பது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

செயலணி அமைப்பது தொடர்பில் தன்னிடம் ஆலோசிக்கப்படவில்லை என்று கூறிய அவர், இந்த நடவடிக்கை குறித்து தான் மகிழ்ச்சியடையவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## பொறுப்புடன் செயற்படுங்கள்



மாகாண எல்லைக் கட்டுப்பாடுகள், பிற கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது தொடர்பில், மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்கும் பொருளாதார விவகாரங்களை எளிதாகப் பராமரிப்பதற்கும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன என்று குறிப்பிட்டார்.

உல்லாசப் பயணம், யாத்திரைகள் சென்று மகிழ்வதற்கான நேரம் இதுவல்ல என்றும் அத்தியாவசிய நோக்கங்களுக்காக மட்டுமே மக்கள் வெளியே செல்ல பரிந்துரைக்கப்படுகிறது என்றும் வலியுறுத்தினார்.

இருப்பினும், மக்கள் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே இருக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்றார்.

தொடர்ச்சி P2





## 22ஆவது சிரார்த்த தினம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகரும் இந்திய வம்சாவளி மக்களின் தலைவருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 22ஆவது சிரார்த்த தினம், நேற்று முன்தினம் (30) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது பழைய பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம்.

### துறைமுகங்கள், பெற்றோலியம் உட்படப் பல துறைகள்

## அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

துறைமுகங்கள், பெற்றோலியம், தபால், போக்குவரத்து, அரச வங்கிகள் உள்ளிட்ட பல துறைகளில் வழங்கப்படும் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர, வெள்ளிக்கிழமை (29) வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

தொடர்ச்சி P2

## வன்முறைக்குத் தயாரான கும்பல் சிக்கியது



■ எம்.றொசாந்த்

வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 13 பேர், நேற்று முன்தினம் (30) மாலை 5 மணியளவில், வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, 5 வாள்கள், 2 மோட்டார்சைக்கிள் செயின், 6 சரை கஞ்சா, ஒரு கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என, பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய வீடொன்றில், வன்முறைக் கும்பல் ஒன்று வன்முறைக்கு தயாராகி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில்,

தொடர்ச்சி P2

### அரசாங்கத்துக்குள் சதி

## நாடகம் நடத்த விடமாட்டோம்



அரசாங்கத்துக்குள் அமர்ந்துள்ள நாடகக்காரர்கள் தயக்கம் காட்டினாலும் எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை வீழ்ச்சியடையச் செய்வதற்கு அரசாங்கத்துக்குள் மற்றுமொரு குழுவால் சதித் திட்டம் தீட்டப்பட்டு வருவதாக ஆளும் கட்சியின் பின்வரிசை எம்.பியான பிரமித பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க அரசியல் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பிளவுகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தி, அரசாங்கத்தில் கிளர்ச்சிக் குழுக்கள் இருப்பதாக தெரிவித்த போதிலும் அவை கிளர்ச்சிக் குழுக்களல்ல மாறாக நாடகத்தனமான செயற்பாடுகள் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடகக் கலைஞர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நாடகம் ஒன்றை அரங்கேற்றுவதாகவும், இவ்வாறான நாடகங்களை அரசாங்கத்தில் தொடர அனுமதிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டிய அவர், அவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தில் இடமில்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிணைந்து கலந்துரையாடி நாட்டைக் கட்டியெழுப்ப முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





## போதை மாத்திரைகளை விற்ற மருத்துவர் கைது

நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதாகக் கூறி, தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் இனந்தெரியாத போதை மருந்துகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பாணந்துறை கொரகபொல பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடைய வைத்தியர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பிரதேசத்தின் பெற்றோர்கள் மற்றும் விஹாரதிபதிகள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில், ஒரு மாதத்துக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு வந்த கண்காணிப்புக் கடமைகளையடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

### இறைச்சிக்காக லொறியில் கடத்தப்பட்ட

## 16 மாடுகள் மீட்பு

■ ஏ.எஸ்.கீத்

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சர்தாபுர பிரதேசத்தில் சிறிய லொறியொன்றில் நேற்று (31) அதிகாலை 4.30 மணியளவில் இறைச்சிக்காக கடத்திச் செல்லப்பட்ட 16 மாடுகளை தாம் மீட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, மாடுகளை ஏற்றிச் சென்ற



லொறி பறிமுதல் செய்யப்பட்டு, லொறியின் ஓட்டுநரையும் உதவியாளரையும் கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### ஆசனத் திறனை மீறினால்

## அனுமதிப்பத்திரம் முடங்கும்



ஆசனத் திறனை மீறி பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களின் அனுமதிப்பத்திரம் இன்று (01) முதல் முடக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களை மாகாணங்களுக்கு உள்ளும் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயும் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். எத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தனியார் பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆசன திறன் தொடர்பில் பொலிஸாரால் நிச்சயம் கண்காணிக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் கீழ் சுகாதார அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டதாக கூறிய அவர்,

தொடர்ச்சி P2

LK Newspapers
vibe community

PAGE 1 தொடர்ச்சிகள்

# சிறுபான்மை கட்சிகள் உடும்புப்பிடி



நேற்று முன்தினம் கொழும்பில் கூடிய சிறுபான்மைக் கட்சிகளின் கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்ட அனைத்து அதிகாரங்களும் கொண்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை கருத்திற்கொண்டு விகிதாசார தேர்தல் முறையை பேணுவதற்கு கூட்டாக செயற்படுவதற்கு ஏழு கட்சிகளும் உறுதிபூண்டுள்ளதாக கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயகத்தின் நலன் கருதி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு இணையாக பாராளுமன்றம் மற்றும் அனைத்து சட்டமன்றங்களும் 'சரிபார்ப்பு மற்றும் சமநிலை எந்திரங்களாக செயற்பட வேண்டும்' என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் நடைபெற்ற சிறு கட்சிகளின் கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணி கலந்து கொள்ளாமை தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில், அவர் தெரிவித்திருந்ததாவது, ஜே.வி.பியின் தலைவர் நண்பர் அநுர திஸாநாயக்க மற்றும் விஜித ஹேரத் ஆகியோரை ஏற்பாட்டாளர்களின் சார்பாக நான் நேரடியாக அழைத்திருந்தபோதும், அக்கட்சி சார்பாக எவரும் கலந்துக்கொள்ளவில்லை. இதையிட்டு கவலையடைகிறேன் என்று தெரிவித்தார்.

சிறுகட்சி என்றால் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை கட்சிகள் மட்டுமல்ல. ஜே.வி.பி போன்ற அரசியல் சிறுகட்சிகளினதும் இருப்புகளை இந்த அரசாங்கம் இன்று கேள்விக்குறிக்கு உள்ளாக்கியுள்ளது என்றார்.

கண்டி சமூக அபிவிருத்தி மன்றம் நடத்திய தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடல், தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு மட்டும் வரையறையானதல்ல.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட பின்னணியில், பாராளுமன்றத்தையும் இரண்டு கட்சிகளுக்கு மட்டும் வரையறை செய்ய இந்த அரசாங்கம் முயல்கிறது.

தமிழ், முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளை போலவே, ஜேவிபி போன்ற மாற்று அரசியல் கொள்கைகளை முன்னெடுக்கும் கட்சிகளின் இருப்பையும் இது இல்லாதொழிக்க முயல்கிறது.

பல கட்சி பிரதிநிதித்துவங்களுக்கு பாராளுமன்றமும், மாகாண சபைகளும் இன்றைய விகிதாசார முறையில் கீழேயே சாத்தியம். எனவே இத்தகைய பன்மைத்தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவம் மூலமேயே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணிக்க முடியும். இது இந்நாட்டு ஜனநாயகத்துக்கு அடிப்படை அவசியமாகும்.

எனவே இந்த ஜனநாயகத்தை பாதுகாக்கும் பல கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் விகிதாசார தேர்தல் முறைமையை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஜே.வி.பி முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என நான் விரும்பியிருந்தேன் என்றார்.


## பதவி நீக்கப்படுவார்களா?

ஜனாதிபதி தற்போது முன்னெடுத்துள்ள ஐரோப்பிய சுற்றுப் பயணம் நிறைவடைந்து நாடு திரும்பியதும் இந்த விடயம் தொடர்பான காரணங்களை முன்வைக்க பின்வரிசை உறுப்பினர்கள் தயாராகவிருப்பதாகவும் அறிய முடிகிறது.

அதற்கு முன்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், அரசாங்கத்தை விமர்சிக்காமல், அமைச்சுப் பதவிகளை கைவிட்டு, சமூகத்திடம் சென்று எதை வேண்டுமானாலும் தெரிவிக்கலாம் என அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் பகிரங்கமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசிகளைத் தகர்க்கும் புதிய கொரோனா திரிபு



இலங்கையும் இதுதொடர்பாக அதிக எச்சரிக்கையுடன் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

இந்த மாறுபாடு பரவினால் பெரும் சிக்கலை சந்திக்க நேரிடும் என்றும் எல்லாம் முடிந்து விட்டது என மக்கள் நடந்து கொண்டால், இன்னும் நான்கு வாரங்களில் மோசமான விளைவுகள் தென்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் குளிர்காலத்தில் இந்த மாறுபாடு வேகமாக பரவினால், உலகில் அழிவை ஏற்படுத்தும் ஒரு பேரழிவு நிலைமை ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

ஜேர்மனியின் ஆராய்ச்சியாளர்கள் குழுவினரால் கண்டறியப்பட்டுள்ள புதிய மாறுபாடான A30 ஆனது, கடைசியாக 2021 மே மற்றும் ஜூன் மாதங்களில் பரம்பல் நிலையில் இருந்தது.

அவற்றில் மூன்று திரிபுகள் அங்கோலாவிலும் ஸ்வீடனில் ஒரு திரிபும், ஐக்கிய இராச்சியத்தில் ஒரு திரிபும் உள்ளதாக சர்வதேச ஊடகங்களினால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாறுபாடு தொடர்பில் அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்று குறிப்பிடும் சில விஞ்ஞானிகள், இந்த மாறுபாடு ஏற்கெனவே அழிந்துவிட்டதாகக் கருதுகின்றனர்.

ஏனெனில், உலகில் நான்கு தொற்றாளர்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், கடந்த ஐந்து மாதங்களில் எவரும் தொற்றுக்குள்ளாகவில்லை என்பதாலுமே இவ்விடயத்தை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## பொறுப்புடன் செயற்படுங்கள்



எனவே, சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை அவசியம் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், பாதுகாப்பு நடவடிக்கைகளை நீக்கினால் ஏற்படும் சேதம் மீள முடியாததாக இருக்கலாம் என்றும் எச்சரித்தார்.

இலங்கையர்களுக்கான மூன்றாவது கொரோனா தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இன்று (1) தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதென சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதில் முதற்கட்டமாக சுகாதார தரப்பினருக்கே வழங்கப்படவுள்ளது.

குறித்த பூஸ்டர் தடுப்பூசியானது, இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்பட்டு, 6 மாதங்களின் பின்னரே செலுத்தப்படும் என்றார்.

இதில் முன்னுரிமையாளர்களாக சுகாதார தரப்பினர், முப்படையினர், அதேபோல் விமான நிலையம், துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு செலுத்தப்படும் என்றார்.

## நாடகம் நடத்த விட மாட்டோம்



தம்புள்ளை இப்பன்கடுவ பிரதேசத்தில் விஷமில்லா உணவு விற்பனை நிலையத்தை திறந்து வைத்து விவசாயிகளுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## நீதியமைச்சர் அலிசப்ரி அதிருப்தி



'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி கோட்டாபய, புதன்கிழமை (27) நியமித்தார்.

இந்தச் செயலணியை அறிவித்த அவர், பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையில் இயங்கும் என்றும் அறிவித்தார்.

இலங்கையினுள் ஒரே நாடு- ஒரே சட்டம் என்ற கருத்தாக்கத்தை செயற்படுத்துவது தொடர்பில் ஆய்வு செய்யும் பொறுப்பு பணிக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைவொன்றைத் தயாரித்தல், நீதி அமைச்சினால் இதுவரை இதற்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுகள் மற்றும் திருத்தங்களைக் கற்றாராய்ந்து அவற்றின் பொருத்தம் மற்றும் தகுந்த திருத்தங்கள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும் உரிய வரைவில் உள்ளடக்குதலும் இக்குழுவினருக்கு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## போதை மாத்திரைகளை விற்ற மருத்துவர் கைது

சனிக்கிழமை (30) இரவு 7.30 மணியளவில் பாணந்துறை பள்ளிய முல்ல பகுதியில் இவர் நடத்தி வந்த வைத்திய நிலையமொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், அடையாளம் தெரியாத 2,535 மாத்திரைகளை கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த பெறுமதி 4 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலின்படி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வன்முறைக்குத் தயாரான கும்பல் சிக்கியது



பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து, குறித்த வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்ட போது, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 13 பேரும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## அனுமதிப்பத்திரம் முடங்கும்

நடத்துநர்கள் ஆசன திறன்களை மீறினால் சுகாதார அதிகாரிகள் பொதுப் போக்குவரத்தை இடைநிறுத்த முடியும் என்று தெரிவித்தார்.

விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அவ்வாறான பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு எதிராக பொலிஸ் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் எச்சரித்தார்.

## 16 மாடுகள் மீட்பு



மீட்கப்பட்ட 16 மாடுகளில் 10 ஆண் மாடுகளும் 6 பசுக்களும் அடங்குவதாகவும் கைது செய்யப்பட்டவர்களையும் மீட்கப்பட்ட மாடுகளையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

இதன்மூலம், சுகாதார சேவைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வழங்கிய கொவிட்-19 தடுப்பு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் மற்றும் அத்தகைய சேவைகளை வழங்குவதில் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, பின்வருபவை சாதாரண பொது வாழ்க்கையை நடத்துவதற்கான அத்தியாவசிய சேவைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின்படி நிறுவப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையால் அல்லது அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து சேவைகள், பணிகள் அல்லது உழைப்பு.

2. பெற்றோலிய பொருட்கள் மற்றும் திரவமாக்கப்பட்ட எரிவாயு உட்பட அனைத்து எரிபொருட்களின் விநியோகம் மற்றும் விநியோகம்.

3. அனைத்து சேவைகள், வேலைகள், எந்தவொரு விளக்கத்தின் உழைப்பு, வெளியேற்றம், வண்டி, தரையிறக்கம், சேமிப்பு, விநியோகம் மற்றும் எண்ணெய் அல்லது எரிபொருளை எந்த துறைமுகத்தில் உள்ள கப்பல்களிலிருந்தும் அகற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமான அல்லது தேவைப்படும். சுங்கச் சட்டத்தின் நோக்கங்களுக்காக.

4. இலங்கை ரயில்வே திணைக்களத்தின் சரக்கு போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்து சபையால் மேற்கொள்ளப்படும் அனைத்து பொது போக்குவரத்து சேவைகளும்.

5. சேவைத் தேவைகளுக்கு ஏற்ப இத்தகைய பொதுச் சேவைகளை மேற்கொள்ள இன்றியமையாத பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு அம்சங்கள்.

6. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள் உட்பட அனைத்து மாவட்டத்தின் அனைத்து கள மட்ட உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து வகையான சேவைகள், பணிகள் அல்லது தொழிலாளர் பங்களிப்புகள் பிரதேச செயலகங்கள்.

7. இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கி மற்றும் காப்புறுதி சேவைகள்.

8. உள்ளூராட்சி அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கழிவு முகாமைத்துவ சேவைகள்.

9. லங்கா சதொச லிமிடெட், கூட்டுறவு மொத்த விற்பனை மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு, பானங்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் உட்பட, விநியோகம், சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அனைத்து சேவைகள், பணிகள் அல்லது உழைப்பு.

உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை, சிலோன் சுகர் (பிரைவேட்) லிமிடெட்.

10. மாகாண சபைகளின் கீழ் உள்ள அனைத்து அரசாங்க அலுவலகங்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது அவசியமான அனைத்து சேவைகள், வேலை அல்லது உழைப்பு.

11. சுகாதார சேவைகள் தொடர்பாக செய்ய வேண்டிய அனைத்து சேவைகள் அல்லது வேலைகள்.

LK Newspapers Viber Community

# பங்காளிகளால் அரசாங்கத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் தனித்தனியாக முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளால் அரசாங்கத்துக்கு எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புதிய களனி பாலத்தை பார்வையிடும் விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், களனிப் பாலத்தின் பணிகளை நிறைவு செய்து இம்மாதம் மக்கள் பாவனைக்கு திறக்க எதிர்பார்க்கிறோம். மேலும், நீதிமன்றத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டத்தை மீரிகம தொடக்கம் குருநாகல் வரை பூர்த்தி செய்து நவம்பர் 15 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு திறக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் சிறு கட்சிகள் தனியாக பேச்சுவார்த்தை நடத்தியது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ,

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும்



சிறு கட்சிகளைச் சேர்ந்த குழுவொன்று தற்போது தனித் தனியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளன. பேச்சுவார்த்தை நடத்த அவர்களுக்கு உரிமை இருக்கிறது. சிறு கட்சிகளின் இந்தக் கூட்டங்கள் எமக்கு ஒரு பிரச்சினையல்ல. அரசாங்கம் என்ற வகையில் நாம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டு கட்சிகளுடன் கலந்துரையாடல் களை நடத்துகிறோம் எனவும் கூறினார்.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தொழிற்சங்கங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியானது என்று சொல்ல முடியாது. தொழிற்சங்கம் என்பது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். அண்மையில் துறைமுக தொழிற்சங்கங்கள் கிழக்கு முனையத்தை வழங்குவதை எதிர்த்தன எனவும் கூறினார்.

இதன் விளைவாக கிழக்கு முனையத்துக்குப் பதிலாக அதனை விட பெரிய மேற்கு முனையம் வழங்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் அரசியல் கோணத்தில் இல்லாமல் நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலை குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒரு அலகு மின்சாரத்தின் விலை குறைவதாக இருந்தால் தொழிற்சங்கங்கள் ஏன் அதனை எதிர்க்கின்றன? குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அது ஊழல் ஆகாது. தொழிற்சங்கங்கள் அதிக விலைக்கு சார்பாக இருந்தால் அதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் இந்த நாட்டு மக்களை இரண்டு நாட்களுக்கு இருட்டில் வைத்திருக்க முயல்கின்றன என்றால் அது எத்தகைய அநீதியான முடிவாகும் எனவும் தெரிவித்தார்.

ஒரே நாடு ஒரே சட்டம்;

# 'சர்ச்சைக்குரியவர்களுக்கு பொறுப்பான பதவிகளைக் கொடுக்காதீர்'

முஸ்லிம்களின் மத உணர்வுகளைப் புண்படுத்திக் கொண்டிருக்கும் சர்ச்சைக்குரிய ஒருவர், பொறுப்பான ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு கவலையும் அதிருப்தியும் அடைகின்றோம் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டிருப்பதை அறிந்து நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம். அண்மைக் காலமாக இத்தலைப்பு பொதுத் தலங்களில் பேசுபொருளாகக் காணப்பட்டுவருகின்றது. இலங்கையில் வாழக் கூடிய சகல பிரஜைகளும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் யாப்புக்கு அமைய, ஒரே நாடு ஒரே மக்கள் என்ற அமைப்பில், அவரவரது மத விழுமியங்களையும் கலாசாரங்களையும் பேணி,மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மதங்களை மதித்து நடக்கக் கூடிய மதத் தலைவர்கள் பலர் வாழும் நம் நாட்டில், மத நிந்தனைகளில் ஈடுபட்டு முஸ்லிம்களின் மத உணர்வுகளை புண்படுத்திக் கொண்டிருக்கும் சர்ச்சைக்குரிய ஒருவர் பொறுப்பான ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு நாம் கவலையும் அதிருப்தியும் அடைகின்றோம். இதன் மூலம் முஸ்லிம்கள் பலவழிகளில் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் முஸ்லிம்களுக்கு மத்தியில் எழுந்துள்ளது.

இந்நியமனம் சர்வதேச மட்டத்தில் நம் நாட்டுக்கு அகௌரவத்தைக் கொண்டு வரும் ஒருவிடயமாகவும் அமைந்துள்ளது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அமைதி, சமாதானம், சுபீட்சம், ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி ஏற்பட்டு எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

நாட்டை நேசிப்பவர்களை இணைத்து

# புதிய கட்சியை ஆரம்பிக்க வேண்டும்

நாட்டிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் மக்கள் இல்லை. நாட்டை நேசிப்பவர்களை ஒன்றிணைத்து புதிய அரசியல் கட்சியை உருவாக்க இருப்பதாகவும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பேச்சுக்களை விரும்பி கேட்கும் மக்கள் அநுரவுக்கு வாக்களிப்பதில்லை. இவ்வாறான நிலையில் நாட்டில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக நாட்டை நேசிப்பவர்களை ஒன்றிணைத்து புதிய கட்சியை ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன்



பிரேமரத்ன, சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் நாட்டை நேசிப்பவர்கள். எனினும் எங்களுக்கு போதுமான நிதி பலம் இல்லை. இருந்தால் புதிய கட்சியை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் தனக்கு அதிகாரம் கிடைத்தால் அதனை செய்வேன். பொலிஸ் திணைக்களத்தில் மோசடியாளர்களே இருக்கிறார் எனவும் கூறினார்.

ஆர்பாட்ட திடலில்

# ஆறாவது நாளாகவும் தொடர்கிறது போராட்டம்

இரா.யோகேசன்

அதிபர்,ஆசிரிய சம்பள முரண்பாட்டுக்கான தேசிய முன்னணியினால் ஜனாதிபதி செயலகத்தின் ஆர்பாட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள திடலில் 6ஆவது நாளாகவும் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

6ஆவது நாளாக நேற்று (31) முன்னெடுத்த போராட்டத்தின்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை அரச ஆசிரிய சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவர் சமந்த லியனகம, கடந்த 24 வருடங்களாக அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு காணப்படுகிறது. நாங்கள் இந்த இடத்தில் போராட்டத்தை முன்னெடுக்கும்போது ஜனாதிபதி செயலத்துக்குட்பட்ட அதியுயர் பாதுகாப்பு பிரதேசத்தில் உள்ள புற்கள் உள்ளிட்ட சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார்கள். துறைமுகநகரத்தால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லையா? எனவும் அவர் வினவினார்.


எவ்வாறாயினும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாள் நாம் மேற்கொள்ளும் போராட்டம் தொடர்பில் இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயம். இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாக தலையீடுகளை மேற்கொண்டு தீர்வை பெற்றுத்தர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பாடசாலையில் பலருக்குக் கொரோனா

அநுராதபுரம் - ஹொரவிபொதான, தம்புத்தேகம மற்றும் பதவிய பிரதேசத்தில் உள்ள முன்னணி பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் உள்ளிட்டோருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

30 மாணவர்கள், 3 ஆசிரியர்கள், ஒரு அதிபருக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ஆர்.எம்.எஸ்.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஏனையவர்கள்



வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த 100இக்கும் அதிகமானோர் தனிமைப்படு த்தப்பட்டுள்ளனர்.

# புத்தள மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை

ரஸீன் ரஸ்மின்

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தெதுரு ஓயா, ராஜாங்கன மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

குறித்த நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன்படி, தெதுரு ஓயா நிர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் மூன்று அடி வரையும், ராஜாங்கன நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் நான்கு அடி வரையும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், தெதுரு ஓயா, ராஜாங்கன மற்றும் அங்கமுவ நீர்த்தேக்கங்களுக்கு அண்டிய தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு புத்தள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

மேலும், தொடர்ச்சியாக மழை பெய்தால் குறித்த நீர்த்தேக்கங்களின் மேலதிக வான் கதவுகளும் திறக்கப்படலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ள போதிலும், இதுவரை எவரும் இடம்பெயரவில்லை என புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் கூறினார்.

# பாடசாலை நடவடிக்கைகள் வழமை போல் மேற்கொள்ளப்படும்

இரண்டு கட்டங்களின் கீழ், நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் சில வாரங்களில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமை போன்று மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களின் வருகையில்



முறையான அதிகரிப்பை காண முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் மற்றும் அதிபர்களின் வருகையும் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா மேலும் தெரிவித்தார்

# மாகாணங்களுக்கு இடையிலான ரயில்சேவைகள் இன்று முதல் ஆரம்பம்

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை தளர்த்தப்பட்ட பின்னர், இன்று (01) முதல் மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் மாகாணங்களுக்கு இடையில் 152 ரயில்கள் இயக்கப்பட உள்ளன. பாடசாலை போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது



எனவும், அத்தியாவசிய காரணங்கள் தவிர்ந்து ஏனைய அநாவசிய பயணங்களுக்காக ரயில்களைப் பயன்படுத்த வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.


# மின்னல் தாக்கியதில் சிறுவன் பலி

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் ஆனமடுவ பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளான சிறுவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

ஆனமடுவ, பாலியாகம பகுதியைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுவனே நேற்று (30)இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குறித்த சிறுவன் தனது தாத்தாவுடன் வயலுக்குச் சென்ற போதே இவ்வாறு மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அங்கிருந்தவர்கள் உடனடியாக ஆனமடுவ வைத்தியசாலையில் சிறுவனை அனுமதித்துள்ளனர். பின்னர்,



மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட போதிலும் அங்கு சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பி.சி.ஆர் பரிசோதனைக்கு ட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# இயேசு கல்லூரிக்கு சென்றார் பீரிஸ்

இலங்கை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் இயேசு கல்லூரிக்கு வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் விஜயம் செய்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய சட்ட வல்லுனர்களுக்கும், அவர்களது பெறுமதி வாய்ந்த நுண்ணறிவு மற்றும் ஆலோசனைகளுக்காகவும் வெளிநாட்டு அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

டேனியல் பிரென்னன் கியூ.சி. பிரபு மற்றும் அவுஸ்திரேலியாவின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும், தற்போது ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள அரசாங்கத்துக்கான சர்வதேசப் பாடசாலையின் பணிப்பாளருமான அலெக்சாண்டர் டவுனர் ஆகியோரை பேராசிரியர் பீரிஸ் லண்டனில் தனித்தனியாகச் சந்தித்தார்.


## சீதாவகபுர மாநகர சபை
## கொள்முதல் விளம்பரம்

### 2022 ஆம் ஆண்டுக்கான இறைச்சி, மீன் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கு

சீதாவகபுர மாநகர சபைக்கு சொந்தமான கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே உள்ள இடங்கள் 2022.01.01 முதல் 2022.12.31 ஆம் திகதி வரை உள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் விலை மனு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விலைமனு விண்ணப்பம் விநியோகித்தல் : 2021.11.15 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை.
விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் கடைசி நாள் : 2021.11.16 ஆம் திகதி மு.ப 9.45 மண வரை.
விலைமனுக்கள் திறக்கப்படுவது நாள் : 2021.11.16 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு

மாநகர சபை வளாகத்தில் பொதுக் கூட்டத்தில்.

| புதிய வியாபார கட்டிடத் தொகுதி மேற்கு கடையின் இலக்கம் | விலைமனு விண்ணப்பம் கட்டணம் (ரூபா) | விலைமனு வைப்பீடு (ரூபா) | 2022 ஆம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த மாதாந்த வாடகை (ரூபா) |
|---|---|---|---|
| M - 52 மாட்டிறைச்சி கடை | 1000.00 | 105,000.00 | 141,800.00 |
| M - 46 ஆட்டிறைச்சி கடை | 750.00 | 25,000.00 | 11,000.00 |
| M - 49 பன்றி இறைச்சி கடை | 750.00 | 50,000.00 | 30,000.00 |
| M - 45 கோழி இறைச்சி கடை | 750.00 | 50,000.00 | 13,500.00 |
| M - 50 / 51 மீன் கடை | 750.00 | 50,000.00 | 30,000.00 |
| புவக்பிடிய ஞாயிறு சந்தை இலக்கம் 01 மீன் கடை | 500.00 | 2500.00 | 36,900.00 |

தொடர்புகளுக்கு – 036 - 2222275
036 - 2222285

தலைவர்,
சீத்தாவக்கபுர மாநகர சபை,
அவிசாவளை.
2021. 10. 28 திகதி சீதாவகபுர மாநகர சபை காரியாலயத்தில்


LK Newspapers Viber Community

சிறுபோகத்தில்

# கிளிநொச்சிக்கு வெற்றி

## அடுத்ததாக காலபோகத்துக்கு நகர்கிறது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி மாவட்டத்தில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 78.6 சதவீதமான நிலப்பரப்பில், இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு, இதைத் தொடர்ந்து, காலபோகச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது வரையான நீர்ப்பாசனக் குளங்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இரணைமடு குளம், பிரமந்தனாறு குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம், உள்ளிட்ட நான்கு குளங்களும், மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டிகுளம், கரியாலை நாகபடுவான் குளம், உள்ளிட்ட ஐந்து குளங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன எனவும் கூறினார்.

இதில், கிழக்குப் பகுதியில், 26 ஆயிரத்து 297 ஏக்கர் நிலப்பரப்பிலும் மேற்கு பகுதியில், 7,367ஏக்கர் நிலப் பரப்பிலும் என சுமார் 33 ஆயிரத்து 664 ஏக்கர் வரையான நிலப்பரப்பு நீர்ப்பாசன பரப்பளவைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இது வடக்கு மாகாணத்தில் 50 சதவீதமான நிலப்பரப்புகளை கிளிநொச்சி மாவட்டம் கொண்டுள்ளது எனவும் கூறினார்.

இந்த நிலையில், இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கையின் போது, மொத்த நிலப்பரப்பில் 78.6 சதவீதமான நிலப்பரப்பில், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில், 68.2 சதவீதமான நிலப் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இரணைமடுக்குளம், அக்கராயன் குளம், குடமுருட்டி குளம் ஆகிய குளங்களின் இவ்வாண்டு, காலபோக செய்கை 100 சதவீதம் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் கல்மடு குளத்தின் 75 சதவீதமான நிலப்பரப்பிலும் வன்னேரிகுளத்தின் கீழ் 70 சதவீதமான நிலப்பரப்பிலும் புதுமுறிப்பு குளத்தின் கீழ் 92 சதவீதமான நிலப்பரப்பிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

கர்ப்பிணிகளுக்கு

# சலுகை விலையில் 'அங்கர்' விநியோகம்

■ எஸ் நித்லையநாதன்




புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு, 400 கிராம் அங்கர் பால்மா பக்கெட், 380 ரூபாய்க்கு வழங்கப்படுகின்றது.

எனவே, கர்ப்பிணித் தாய்மார்கள் தங்களை அடையாளப்படுத்தி, கிராமக் கோட்டடியில் உள்ள சங்க தலைமையகத்தில், அங்கர் பால்மா பக்கெற்றை பெற்றுக்கொள்ளுமாறு, சங்கத் தலைவர் வி.ஜி தங்கவேல் தெரிவித்துள்ளார்.



இரணைதீவில்

# பொதுமண்டபம் நிர்மாணம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, இரணைதீவில் பொதுமண்டபம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடமாகாண அமைச்சின் நான்கு மில்லியன் ரூபாய் நிதி உதவியில், பூநகரி பிரதேச செயலகத்தால், இக்கட்டட வேலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி கடற்றொழில் சங்கம், இக்கட்டட வேலைகளின் ஒப்பந்தகாரராக உள்ளது.

1992ஆம் ஆண்டில், இரணைதீவில் இருந்து, மக்கள் முற்றாக இடம் பெயர்ந்த பின்னர், இரணைதீவின் அனைத்து கட்டுமானங்களும் சேதமடைந்த நிலையில் காணப்படும் நிலையில், அங்கு குடியேறி உள்ள 84க்கும் மேற்பட்ட குடும்பங்களின் ஒன்றுகூடலுக்காக இப்பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படுகின்றது.

இதற்கான கட்டுமானப் பொருள்கள், முழங்காவில் - இரணைமாதா நகரில் இருந்து படகுகளில், இரணைதீவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இரணைதீவில் கல், மணல் காணப்படும் நிலையில், இரணைமாதா நகரில் இருந்து இரணைதீவுக்கு படகுகளில் கட்டுமானப் பொருள்களை ஏற்றிச் செல்வதில் பெருமளவு நிதி விரயமாவதாக, இரணைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறைந்தது, இரணைதீவில் மணலையாவது பெற்று, பொது மண்டப வேலைகளை முன்னெடுப்பதன் மூலம், நிதி மிகுதியாவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். - கொழும்பு ரயில் சேவை

# புதன் மாலை ஆரம்பம்

■ என்ராஜ்



யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையிலான ரயில் சேவை, புதன்கிழமை (03) மாலை ஆரம்பமாக உள்ளதாக, யாழ்ப்பாண ரயில் நிலையத்தின் பிரதான ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இதற்கமைய, புதன்கிழமை (03) மாலை 5.30 மணிக்கு, கொழும்பு - கல்கிசையில் இருந்து புறப்படும் ரயில் யாழ். - காங்கேசன்துறையை வந்தடைந்து, மறுநாள் வியாழக்கிழமை (04) காலை 5.30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு, கொழும்புக்கு பயணிக்கவுள்ளது.

எனினும், இன்று வரை முற்பதிவு தொடர்பான எந்தவித தகவல்களும் அறிவிக்கப்படவில்லை. எனவே, புதன்கிழமை ஆரம்பமாகும் ரயில் சேவையானது, வழமைபோல் இடம்பெறவுள்ளது.

யாழில் இருந்து கொழும்புக்கு ஒரு சேவையும் கொழும்பில் இருந்து யாழுக்கு ஒரு சேவையுமாக சாதாரண ரயில் சேவை மாத்திரமே முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது என, அவர் மேலும் தெரிவித்தார்.

பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதத்தை வெறுப்பவரா

# சட்டத்தை நிர்ணயிப்பார்?

## ஜனா எம்.பி கேள்வி

## திருடன் கையில் பொலிஸ் ஒப்படைப்பு எனச் சாடல்

■ கேஎஸ்ரீ யுதாஜித், வ. சக்தி



பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாக தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருகின்ற ஒருவரை, பல்லின மக்களுக்கான சட்டத்தை நிர்ணயிக்கப் பொறுப்பளிப்பது, திருடன் கையில் பொலிஸ் உத்தியோகத்தைக் கொடுப்பதற்கே ஒப்பானதாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி மற்றும் அதற்குத் தலைமைத்துவம் வழங்க கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளமை போன்ற விடயங்கள் தொடர்பில் நேற்று (31) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கொலைக் குற்றவாளிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படுவதும் அவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்படுவதும், நாட்டின் நீதியை மதிக்காதவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவதும் இலங்கைக்குப் புதிய விடயமல்ல.

"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய பாரம்பரிய தாயகம் என்ற நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் காலங்காலமாக செயற்படும் கொள்கையே பெரும்பான்மையினரிடம் இருந்து வந்திருக்கிறது.

"இந்த வகையில், சிங்கள இனவாதத்தின் ஒருமித்த செயற்பாடே ஒரே நாடு, ஒரே சட்டம். இத்திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். இல்லையேல் நாடு பாரதூரமான விளைவுகளையே சந்திக்கும்.

"நாட்டில் இராணுவ மயப்படுத்தல், சிங்கள மயப்படுத்தல் என பல குற்றச்சாட்டுக்கள் இருக்கையில், இச்சட்டம் இன்னுமொரு படி மேலே நகர்த்தப்படுவது, சிறுபான்மை மக்களின் சாபக்கேடாகும்" என்றார்.



ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில்

# திருகோணமலையில் 273 பேருக்கு நியமனம்

■ ஒலுமுதீன் கியாஸ்

இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 273 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இதற்கான நிகழ்வு, திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நேற்று (31) நடைபெற்றது.

சேருவில, வெருகல், கந்தளாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்காக இதன்போது நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவான் அத்துகோரல, எம்.எஸ். தௌபிக், திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷன பாண்டிகோராள உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



திருக்கோவிலில்

# 11 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம்

■ சகா

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் 04 கிராமசேவகர் பிரிவில், அரச காணியில் வசித்து வரும் 11 குடும்பங்களுக்கு, காணி அமைச்சர் சந்திரசேனவால் நேற்று முன்தினம் (30) காணி அனுமதிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' எனும் கொள்கைத் திட்டத்தின் கீழ், கிராமத்துக்கு கிராமம் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், இந்நிகழ்வு நடைபெற்றது.

சுபீட்சத்தின் நோக்கு மற்றும் காணி அமைச்சின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தணி நிலாந்த விஜயசிங்க தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்வில் காணி அமைச்சர், வன விலங்கு மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் விமல வீர திஸாநாயக்க, அம்பாறை மாவாட்ட அபிவிருத்தி குழு தலைவர் டி.வீரசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள்

# மாத்திரை விற்பனை; பெண் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை, பன்சல வீதியில் நேற்று (31) அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட மேற்படி பெண்ணிடமிருந்து, 09 போதைப்பொருள் மாத்திரைகள், 386 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில், மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் மற்றும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மா சிங்க ஆகியோரின் பணிப்புரையின் கீழ், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# அடிக்கல் நாட்டும் நிகழ்வு...

'சௌபாக்கியத்துக்கான இலக்கு' எனும் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய 'அனைவருக்கும் சுத்தமான குடிநீர்' எனும் கருப்பொருளின் கீழ், மன்னார், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் பகுதியில், தேசிய நீர் வழங்கல் மற்றும் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுடன் இணைந்து தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட 'பிரஜா ஜல அபிமானி' குடிநீர் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, சனிக்கிழமை (30) மாலை நடைபெற்றது. (படப்பிடிப்பு: எஸ். றொசேரியன் லெம்பேட்)







# விடைபெறும் நீதிபதிக்கு பாராட்டு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன், தனது 20 வருட கால நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு, அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நேற்று முன்தினம் (30) மாலை நடைபெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.எல்.எம். றமீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு சங்கத்தின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், விசேட நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்து, வாழ்த்துரை நிகழ்த்தினார்.

அத்துடன் சிரேஷ்ட சட்டத்தரணி றாசுல் ஹாதி, நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தம்பதியினரை பொன்னாடை போர்த்தி, வாழ்த்துரை நிகழ்த்தினார்.

பெண் சட்டத்தரணிகள் சார்பிலும் நீதிபதிக்கு விசேட நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. கொரோனா தொற்றுக் காரணமாக மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்டபோது, அம்பாறை மாவட்டத்தில் பலரின் ஜனாஸாக்கள் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதுடன், அவற்றை எரிக்காமல் வைத்திருக்குமாறு கட்டளையிட்டிருந்த நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் துணிச்சலான தீர்ப்புகள் குறித்து, சட்டத்தரணிகள் பலரும் தமதுரையின்போது சுட்டிக்காட்டி, பாராட்டுத் தெரிவித்தனர்.

newspapers community

மலையகத்தைப் புரட்டிப்போடும் சீரற்ற வானிலை:

# பதுளை, இராகலை கடும் பாதிப்பு

■ மலையக நிருபர்கள்

கடந்த சில தினங்களாக மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பதுளை மாவட்டத்தில் பல இடங்களும் நுவரெலியா மாவட்டத்தில் சில பிரதேசங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் 29ஆம் திகதி பதுளுஓயா பெருக்கெடுத்தன் காரணமாக, பதுளை மாவட்டத்தின் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியது. இதற்கமைய, 192 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி, தெமோதர பகுதியில் பதிவாகியுள்ளது.

இந்த வெள்ளத்தால் பதுளை, ஹாலிஎல, வெலிமட, எல்ல ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகள் பாதிக்கப்பட்டன .

சீரற்ற வானிலையால் பதுளை பிரதேச செயலகப் பிரிவில் 287 குடும்பங்களைச் சேர்ந்த 1,110 பேரும் ஹாலி எலயில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 311 பேரும் எல்லவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 475 பேரும் வெலிமடையில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த பிரதேச செயலகங்களில் 94 வீடுகள் முற்றாகவும் 263 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

ஊவா மாகாணத்தில் உள்ள பிரதான வீதிகளில் ஏற்பட்ட மண்சரிவு, மரம் முறிந்து விழுந்தமை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த போக்குவரத்துகள், தற்போது ஓரளவு வழமைக்கு திரும்பியுள்ளன.





பதுளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் நீரில் மூழ்கியது.

இதன்போது மருந்துகள், தடுப்பூசிகள், பெருமதியான மருத்துவ உபகரணங்கள், மின்சார பொருள்கள், ஆவணங்கள் உள்ளிட்டவை சேதமடைந்துள்ளன.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக,ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் பதுளை, எல்ல, ஆலிஎல ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் 10,000 ரூபாய் நிதியுதவியும் குடிநீர் போத்தல்களையும் விநியோகிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் முஸம்மில் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கண்டி, கட்டுகஸ்தோட்டை நகரிலுள்ள பிரதான பாடசாலையொன்றின் மதில் உடைந்து விழுந்ததில் பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றிலிருந்த 19 வயது மாணவன் காயமடைந்து, கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு நேற்று (31) அதிகாலை திறக்கப்பட்டன.

இதேவேளை, இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை முதலாம் பிரிவு பகுதியில் வெள்ளம் புகுந்ததையடுத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், 7 குடும்பங்களை சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை தோட்ட நிர்வாகத்தின் அதிகாரிகள் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் இப்பகுதி கிராமசேவகர் ஊடாக இராகலை பொலிஸார் மற்றும் மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களை தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பாதுகாப்பு கருதி தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை நுவரெலியா பிரதேச சபையின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.



தெரணியகலையில் எதிர்ப்பை வெளிக்காட்டிய

## சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள்

■ என்.ஆராச்சி

சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளனத்தால், நேற்று (31) தெரணியகல நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கேகாலை மாவட்ட ஒருங்கமைப்பு குழுவால் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தது.

தமது தேயிலை உற்பத்திக்கு ஏற்ற உரத்தைப் பெற்றுத்தருமாறும், சிலோன் டி என்ற நாமத்தை அழிக்க வேண்டாம் என தெரிவித்தே,இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் தற்போது ஏற்பட்டுள்ள உர பிரச்சினையால் தமது வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் எனவே தமக்கான நட்டஈட்டை வழங்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் தெரிவித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## அரசியல்வாதிகளின் அநாகரிகமான செயல் கண்டிக்கத்தக்கது

■ துவாரகஷன்

ஹட்டன் - டிக்கோயா நகர சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அநாகரிகமாக நடந்து கொண்ட அரசியல்வாதிகளின் செயலை உறுப்பினர்கள் என்ற வகையில் வன்மையாகக் கண்டிப்பதாக நகர சபை உறுப்பினர் எஸ். கேசவமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட விஷேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஹட்டன் நகரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்ற 'சமாதான நகரம்' என்ற பெருமைக்கு உரியதாகும். அந்த வகையில் நகர சபை நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருக்கும் தலைவர் மிகவும் கௌரவத்துடன் மதிக்கப்பட வேண்டியவர் ஆவார். ஆனால், அண்மையில் சில அரசியல்வாதிகளும் அவருடைய ஆதரவாளர்களும் தவிசாளரையும் உறுப்பினர்களையும் மிகவும் கேவலமான வார்த்தைப் பிரயோகங்களின் மூலம் அகௌரவப்படுத்தியுள்ளார்கள். அவர்களின் செயலை இந்தச் சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

சபையின் ஆயுட் காலம் முடியும் வரை அவரே தலைவராக இருக்க வேண்டும். அதற்கு சகல மக்களும், உறுப்பினர்களும் வழங்க ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளார்கள். அவர் மனந் தளராமல் தைரியமாக தமது பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசியல்வாதிகள் தாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை சிந்தித்து செயற்பட பழகிக் கொள்ள வேண்டும். அதுவே அவர்களுக்கு சமூகத்தில் கௌரவத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டவைகளுள்

## ஒன்று கூட பரிசோதிக்கப்படவில்லை

### விவசாயத்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

■ மொஹொமட் ஆஸிக்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 200 பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி மருந்து வகைகளில், ஒன்று கூட இலங்கையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற நிகழ்விலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 200 வகையான பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த 200 வகையில் 88 மட்டுமே இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதில், 18 வகை மட்டுமே பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.



அந்த பதினெட்டும் வேறு நாடுகளிலே சோதனை செய்யப்பட்டுள்ளன. நாம் இறக்குமதி செய்யும் பூச்சிக்கொல்லிகள் எதுவும் நம் நாட்டில் சோதனை செய்யப்படவில்லை. 2014 இல் இலங்கைக்கு 400,000 மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்தோம். 2018 இல் எட்டு இலட்சம் மெட்ரிக் தொன் உரத்தையும் இந்த ஆண்டு 12 மெட்ரிக் தொன் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. விவசாயிகள் இரசாயன உரங்களின் பயன்பாட்டை 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளனர் என்றார்.



தலவாக்கலையில்

## சாலையோர உணவகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

■ எஸ்.கணேசன்

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினூடாக 'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் (30) தலவாக்கலை நகரில் சாலையோரம் உணவகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், இவ்வேலைத்திட்டத்திற்கான முதற்கட்டமாக 6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தலவாக்கலை லிந்துலை நகர சபை தவிசாளர், லெட்சுமன் பாரதிதாசன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 100 அலங்கார நகர நிர்மாணத்திற்கு அமைய, தலவாக்கலை நகரமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையின் காரணமாகவே திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை- லிந்துலை நகர சபை கட்டடத்திற்கு முன்பாக இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இங்கு முற்றிலும் சத்துள்ள, ஆரோக்கியமான, பாரம்பரிய உணவு வகைகளை உடனுக்குடன் தயாரித்து வழங்கக் கூடியவாறான வகையில் சாலையோரம் உணவகம் அமைக்கப்படவுள்ளது.

ஹட்டன் நகரில் முகக்கவசம் அணியாத வியாபாரிகளால்

## மீண்டும் தொற்று பரவும் அபாயம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுவோர், ஹட்டன் நகருக்கு வருகைத் தரும் பலர், உரிய முறையில் முகக் கவசத்தை அணிவதில்லை என்பதால், ஹட்டன் நகரில் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வெளிமாவட்டங்களிலிருந்து ஹட்டன் நகருக்கு வருகை தந்துள்ள சில நடமாடும் வர்த்தகர்கள், நகரிலுள்ள சில



வர்த்தகர்களின் அனுமதியுடன் அந்த வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் உரியமுறையில் முகக் கவசம் அணியாமல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

## நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என புதிய கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்க தலைவரும், சிரேஸ்ட சட்டத்தரணியுமான எஸ். மோகனராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கொரோனா முடக்கம், பொருளாதார நெருக்கடி, விவசாயத்தை முன்னெடுத்து செல்ல ஏற்பட்டுள்ள உரத்தட்டுபாடு போன்றவைகளுக்கு முகம் கொடுத்து வரும் மலையக விவசாயிகளுக்கு, இயற்கையும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமது வாழ்வாதார தொழிலாளாக மரக்கறி விவசாயத்தை நம்பி வாழ்ந்த மலையக விவசாயிகள் பலர், பாரிய பொருளாதார இழப்புக்கு முகம் கொடுத்துள்ளனர்.

எனவே இவ்வாறாக பாதிப்புக்களுக்கு விவசாய அமைச்சு நஷ்ட ஈடுகளை வழங்குவதுடன், விதைகள், உள்ளிட்ட நிவாரண உதவிகளையும் தரமான உரம், மருந்துகளையும் வழங்கி ஊக்குவிக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

100 துப்பாக்கி ரவைகளுடன்

## திகனையில் இருவர் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

9 மில்லி மீற்றர் துப்பாக்கிக்காக பயன்படுத்தப்படும் 100 ரவைகள், பகுதி பகுதியாக வேறாக்கப்பட்ட 10 மோட்டார் சைக்கிள்களுடன் அமெரிக்க பிரஜையுரிமையுடைய நபருடன் மற்றுமொருவர் தெல்தெனிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அமெரிக்க பிரஜாவுரிமையுடைய நபர், 27 வருடங்களாக அமெரிக்காவில் வசித்து வந்துள்ளதுடன் அவர் அமெரிக்க கடற்படையில் பணியாற்றியவர் என்றும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திகன- அம்பகோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரின் வீட்டின் பின்புறம் மோட்டார் சைக்கிள்கள் பல பகுதி பகுதியாக வேறாக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே, துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

தான் அமெரிக்க கடற்படையில் பணியாற்றிய போதிலிருந்து குறித்த துப்பாக்கி ரவைகளை வைத்திருப்பதோடு, கடந்தாண்டு இலங்கைக்கு திரும்பியபோது, தமது பயணப்பையுடன் அவை இருந்திருக்கலாம் என்றும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று (31) தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து, சந்தேகநபர்களை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## சந்திப்பு...

மத்திய மாகாண ஆளுநர் யூ. டபிள்யூ. கமகேயை, மலையக மக்கள் முன்னணி பிரதித் தலைவர் ஏ. லோரன்ஸ், தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஆர். இராஜாராம் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினார்கள். இச்சந்திப்பின் போது, மலையகத்தில் ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் பெற்று, பயிற்சிகளை முடித்துக் கொண்டோருக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல், ஊவா மாகாணத்தில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்க போதியளவு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் அங்குள்ள மாணவர்கள் நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கவும், அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கவும் ஆளுநரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
(துவாரகஷன்)





குறைந்த வருமானத்தையுடையவர்களுக்கு

## பசுக்கள் வழங்கப்பட்டன

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை பிரதேசத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு, எம்பிலிப்பிட்டிய ஸ்ரீபோதிராஜ மன்றத்தால், 31 பசுக்கள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த மன்றத்தின் போஷகர் ஓமல்பே சோபித்த தேரர் தலைமையில், இந்த பசுக்கள் வழங்கி வைக்கப்பட்டன.



UK Newspapers Viber Community

# உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அரசாங்கத்தின் நற்பெயருக்குக் கேடு

"கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம்காட்டி, பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சரியானவர்கள் இந்த அரசாங்கத்தில் இல்லை. முறையான நிர்வாகம் இல்லாமையால், டொலர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. முறையான நிர்வாக அதிகாரிகள் இல்லை; ஜனாதிபதிக்கு சிறந்த ஆலோசனை வழங்குவதற்கும் சரியானவர்கள் இல்லை. இதுவே நாடு சீர்குலையக் காரணமாகும்.

நாட்டை முன்னேற்றிச் செல்ல, ஜனாதிபதி எவ்வளவு முயற்சி செய்தாலும், அரசியல் அனுபவமின்மையால் அது சாத்தியமற்றது. கோட்டாபய ராஜபக்‌ஷ இராணுவத்தில் இருந்தவராகவும் மஹிந்த ராஜபக்‌ஷ, மக்களுடன் இருந்தவராகவும் இருக்கிறார்கள்" என, அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரர் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மீதும் அவரின் அரசாங்கத்தின் மீதும் முன்வைக்கும் கருத்துகள் புறக்கணிக்க முடியாதவை. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மக்களும் 'அனலில் விழுந்த புழுப்போல்' துடிதுடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்குக்கு வெளியே கூட, மக்கள் பதாதைகளை ஏந்தியவாறு போராடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். மக்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அவர்கள் முகம்கொடுக்கும் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல், காரணங்கள் கூறி, பிரச்சினைகளைச் சமாளித்து, காலம்கடத்திக் கொண்டு செல்வதிலோ அல்லது குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதிலோதான் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது.

இதேவேளை, இன்னொரு பக்கத்தில் அரசாங்கம், சிங்கள- பௌத்த பேரினவாதத்தைத் தூண்டி, அதில் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி செயலணிகள் உட்பட, அரச திணைக்களங்கள் அனைத்தும், தட்டிக்கேட்பார் இன்றி, இனவாதப் போக்கையே வெளிப்படுத்துகின்றன. இத்தகைய போக்கு, நாட்டையும் மக்களையும் நிம்மதியாக வாழ, ஒருபோதும் வழிசெய்யாது.

இது இவ்வாறு இருக்க, 'தி ஹேரல்ட்' என்ற இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் பிரபல்யமான பத்திரிகையில், ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான முழுப்பக்க விளம்பரம் பிரசுரமாகி இருக்கிறது. சர்வதேச அமைப்புகள், பராக் ஒபாமா போன்ற சர்வதேசத் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய குறித்து, கூறிய கருத்துகளை மேற்கோள்காட்டி, 'போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகளில் நம்பத்தகுந்த வகையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் கிளாஸ்கோ வருகின்றார்! கிளாஸ்கோ மக்களே எச்சரிக்கையாக இருங்கள்' என்ற சாரப்பட அந்த அரசியல் விளம்பரம் அமைந்துள்ளது.

கிளாஸ்கோவில் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிக்கும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான இந்தப்பிரசாரம், அவர் மீதும் நாட்டின் மீதும் நல்ல அபிப்பிராயம் ஏற்படுவதைத் தடுத்துவிடும். இதனால், அவருக்கும் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை நாட்டுக்கும் அகௌரவம் தான்.

நாட்டின் மீது நல்லபிப்பிராயத்தை சர்வதேசத்தில் கட்டியெழுப்புவதும் தனக்கூடாக, அந்நாட்டை சர்வதேசம் மதிக்கும் விதமாக ஆட்சிபுரிவதே ஓர் அரசதலைவரின் முழுமுதல் பொறுப்பாகும்.

எனவே, உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நற்பெயரிழக்கும் அரசாங்கம், தனது போக்கை மாற்றிக் கொள்வதே, தாய் நாட்டுக்கு சாலச்சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கும் என்பதை அழுத்தியுரைக்க விரும்புகின்றோம்.






தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# ஒரு நாடு, ஒரு சட்டம்



என்.கே. அஷோக்பரன்

ஒரு நாட்டுக்கென, ஒரு சட்டத்தை உருவாக்க, இலங்கையின் ஜனாதிபதி என்பவர், ஒரு செயற்றிட்ட அணியை ஸ்தாபித்திருக்கிறார். இந்தச் செயற்றிட்ட அணி பற்றிய விவகாரத்துக்குள் நுழைவதற்கு முன்பு, இந்த 'ஒரு நாடு, ஒரு சட்டம்' என்றால் என்ன என்ற தெளிவுபடுத்தல் அவசியமாகிறது.

ஒரு நாட்டுக்குள் வாழும் வெவ்வேறு இனக்குழும மக்களுக்கு, வெவ்வேறான சட்டங்கள் இருக்கக்கூடாது; அனைவருக்கும் ஒரே சட்டம்தான் இருக்க வேண்டும் என்ற பகட்டாரவாரம்தான், இந்த ஒரு நாடு, ஒரு சட்டத்தின் மூலவிதை.

இலங்கையின் சட்டம் என்பது, பல சட்ட மரபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. றோம டச்சுச் சட்டம், இலங்கையின் பொதுச் சட்டம் ஆகும். ஆனால், அட்மிரால்டி, வங்கித்துறை, வணிகம் போன்றவற்றைப் பொறுத்தவரையில், இலங்கையின் பாராளுமன்றம், சட்டம் ஆக்கியிராத விடயங்கள் தொடர்பில், இங்கிலாந்தின் சட்டங்கள் இங்கு வலிதுள்ளதாகின்றன.

இதைவிட, தனிப்பட்ட சட்டங்களைப் பொறுத்தவரையில், யாழ்ப்பாண மாகாணம் எனப்படும் இன்றைய வட-மாகாணத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள மக்களின் தனிப்பட்ட சட்டமாக 'தேசவழமைச் சட்டம்' காணப்படுகிறது. தேசவழமையை முதன்முதலில் எழுத்துமூலத்தில் தொகுத்தவர்கள், டச்சுக் கொலனி ஆட்சியாளர்களவர். இதைவிட, கண்டிச் சிங்களவர்க்கென தனியாக, தனிப்பட்ட சட்டமும் முஸ்லிம்களுக்கென தனியான, தனிப்பட்ட சட்டமும் காணப்படுகிறது. திருமணம், சொத்துரிமை, வாரிசுரிமை ஆகியவற்றையே பெரும்பாலும் இந்தத் தனிப்பட்ட சட்டங்கள் ஆளுகின்றன.

இந்நாட்டில், வெவ்வேறு இனமக்கள், வெவ்வேறு பாரம்பரிய, பண்பாட்டு, வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்களாக வாழ்கிறார்கள். அவர்களின் பாரம்பரிய, பண்பாட்டு, வாழ்வியலுக்கான அங்கிகாரமாகவே, இந்தப் பாரம்பரியச் சட்டங்கள் பார்க்கப்பட வேண்டும்.

அதனால்தான், 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பு ஆக்கப்பட்டபோது, அதில் அடிப்படை உரிமைகள் அங்கிகரிக்கப்பட்டு, நிர்வாக நடவடிக்கையின் போதான அடிப்படை உரிமை மீறலின் போது, உயர்நீதிமன்றத்துக்கு மனுச்செய்யும் உரிமை வழங்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் அர்த்தபூர்வமானதாக ஆக்கப்பட்டது. இருந்தபோதுகூட, 16ஆவது சரத்தின் மூலம், இந்தப் பாரம்பரியச் சட்ட ஏற்பாடுகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆகவே இந்த பாரம்பரிய சட்ட ஏற்பாடுகள், அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணாணதாக இருப்பினும், அவை தொடர்பில் உயர்நீதிமன்றிற்கு மனுச்செய்ய முடியாத நிலைதான் இருக்கிறது.

இதன் நோக்கம், பாரம்பரியச் சட்டங்கள், அடிப்படை உரிமைகளை மீறுவதை அனுமதிப்பதல்ல; ஆனால், ஒரு குறித்த மனிதக் கூட்டத்தினுடைய பாரம்பரிய பண்பாடுகளுக்கும் வாழ்வியலுக்குமான அங்கிகாரம் வழங்கும் விதிவிலக்காகவே இது உருவானது.

ஆனால், சமகால உலக இயங்கியலுடன் ஒப்புநோக்கும் போது, இலங்கையின் பல பாரம்பரியச் சட்டங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இது ஏன்?

மனித நாகரிகம் என்பது, காலங்காலமாக வளர்ந்துவரும், அல்லது கூர்ப்படைந்து வரும் விடயம். கூர்ப்பு என்பது உயிரியல் கோட்பாடு அல்லது நியதி என்றாலும், அதையொத்த தன்மைகள் சமூக, கலை, பண்பாட்டு வெளியிலும் தென்படுகின்றன.

மனிதக் கூட்டங்களின் வாழ்வியல், கலை, பண்பாடு, நம்பிக்கைகள், விழுமியங்கள், சிந்தனைகள், எண்ணங்கள், வாழ்க்கைமுறைகள் எல்லாம், காலவோட்டத்தில் மாறுபாடுகளைச் சந்தித்தே வருகின்றன.

உதாரணமாக, மனித உரிமைகள் என்ற சிந்தனையைக் குறிப்பிடலாம். 20ஆம் நூற்றாண்டில், இது சர்வதேச ரீதியில் இன்றியமையாத ஒரு பெருவிருட்சமாக எழுந்திருக்கிறது. இன்னும் கூர்ப்படைந்து கொண்டேதான் இருக்கிறது.

1200களின் மக்னா காட்டா முதல், இன்று வரை, மனித உரிமைகள் என்ற சிந்தனையின் வளர்ச்சியும் சர்வதேச மயமாக்கலும், மனித வாழ்வியலில் அவை ஏற்படுத்தியுள்ள மாற்றங்களும் இங்கு கவனிக்கத்தக்கவை. மனிதனை மனிதன் அடிமைகளாக வைத்திருந்து, அடிமைகளை விற்று, வாங்கியமை சாதாரணவிடயமாக இருந்த இதே பூமியில், இன்று மனித அடிமைத்தனம் என்பது, எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாக மாறியிருக்கிறது.

ஒரு காலத்தில், சர்வ சாதாரணமாக இருந்த சாதி ரீதியிலான அடக்கு முறைமை, இன்று சகிக்கப்பட முடியாததொன்றாகவும் சட்டவிரோதமானதாகவும் ஆகியிருக்கிறது. ஆகவே, மனிதக் கூட்டங்களின் பாரம்பரியங்கள், பண்பாடுகள், வாழ்வியல் முறைகள், விழுமியங்கள் எல்லாம் காலவோட்டத்தில் மாறும் என்பதே நியதி.

ஆகவே, இந்தப் பாரம்பரியங்களை, விழுமியங்களை, வாழ்வியலை பிரதிபலிக்கும் சட்டங்களும், அந்த மாற்றங்களை உள்ளீர்த்துக் கொள்பவையாக அமைய வேண்டும்.

இலங்கையின் பொதுச் சட்டம் மற்றும் பல்வேறு தனிப்பட்ட சட்டங்களிலும், மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். திருமணமான தேசவழமைப் பெண்ணொருவர், தன்னுடைய சொத்துகளைக் கையாள, கணவரின் அனுமதியைப் பெற வேண்டும் உள்ளிட்ட ஏற்பாடுகள் காலப்பொருத்தமற்றவை. அது, இலங்கையின் தமிழ்த் தேசத்தின் சமகால வழமையல்ல.

அதுபோல, 12 வயதில் திருமணம் என்பது, காலப்பொருத்தமற்றதொன்று! முஸ்லிம் திருமணம், விவாகரத்து சட்டத்தில் இது தொடர்பான மாற்றம் என்பது அவசியமானது.

மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு முன்பு, முஸ்லிம்கள் மட்டுமல்ல, தமிழர்கள், சிங்களர்வர் எனப் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த பெண்களும் 12, 13 வயதுகளில் திருமணம் செய்தார்கள். அது, அந்தக்காலகட்டத்தின் சமூக நிலையாக இருந்தது. ஆனால், இன்றைய சமூகத்தின் நிலை அதுவல்ல!

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா சாசனம், 18 வயது வரையானவர்களை குழந்தைகள் என்று வரையறுக்கிறது. ஆகவே, 12 வயதில் திருமணம் என்பது குழந்தைத் திருமணமாகிறது. அது, சமகால சமூக விழுமியங்களுடன் ஒத்துப்போகக் கூடியதொன்றல்ல!

ஆகவே, இந்தப் பாரம்பரிய தனிப்பட்ட சட்டங்களில், காலத்துக்கேற்ற மாற்றங்கள் அவசியம் என்பது உண்மை. ஆனால், அதற்காக இந்தப் பாரம்பரியச் சட்டங்களே தேவையில்லை என்பதோ, அல்லது அந்த மாற்றங்கள் குறித்த சமூகத்தைச் சார்ந்தவர்களின் அனுமதியின்றித் தீர்மானிப்பதோ பொருத்தமானதொன்றல்ல.

இன்று, இந்த 'ஒரு நாடு, ஒரு சட்டம்' என்ற பகட்டாரவார சொற்றொடரின் பின்னால் இருப்பது, குறித்த சமூகங்கள் மீதான அக்கறையோ, மனித உரிமைகள் மீதான பற்றுதலோ அல்ல!

மாறாக, கடைந்தெடுத்த பேரினவாதம்.

இதனை உறுதிசெய்யும் விதமாகவே, குறித்த செயலணியின் தலைமையின் நியமனம் காணப்படுகிறது. ஞானசாரர் எனப்படும் நபர், நீதிமன்ற அவமதிப்புக்காக நீதிமன்றால் குற்றவாளியாகக் காணப்பட்டு, ஆறு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதொரு குற்றவாளி.

மைத்திரிபால சிறிசேன, பொது மன்னிப்பு அளித்திருக்காவிட்டால், இன்றும் சிறையில் இருந்திருக்க வேண்டிய குற்றவாளி. இதைவிட, காணமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் ப்ரகீத் எக்னாலியகொடவின் மனைவியை மிரட்டிய குற்றத்துக்காகக் குற்றவாளியாகக் காணப்பட்டு, ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி.

பொது பல சேனா என்ற 'சிங்கள-பௌத்த' பேரினவாத அமைப்பின் தலைவராக செயலாற்றியிருந்த ஞானசாரர், இலங்கையின் சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம்கள் மீது கடைந்தெடுத்த இனவாதத்தைக் கக்கிய நபர். இந்த இனவாதியைத்தான், இலங்கையின் ஜனாதிபதி எனப்படுபவர் ஒரு நாட்டுக்கென, ஒரு சட்டம் உருவாக்கும் செயலணிக்கு தலைவராக நியமித்துள்ளார்.

இந்தச் செயலணியில், தமிழர் ஒருவரேனும் நியமிக்கப்படாமை தொடர்பில் நிறையக் குரல்கள் எழுந்தன. ஆனால், இது ஒரு கவனச்சிதறல் நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டும்.

இந்தச் செயலணி தொடர்பான பிரச்சினையை, வெறும் தமிழ் பிரதிநிதித்துவத்தின் நியமனத்துக்குள் சுருக்குவதற்கான முயற்சி இது. தமிழர் நியமனத்துக்கான குரல்கள் எழும்போது, ஜனாதிபதி அதனை ஏற்றுக்கொண்டு ஒன்றோ, இரண்டு தமிழர்களை நியமிப்பார்.

இதனூடாக, இந்தச் செயலணி பற்றிய குறைகளை, ஜனாதிபதி தீர்த்ததான உணர்வை ஏற்படுத்தி, இந்தச் செயலணியை நியாயபூர்வமானதாக்கும் முயற்சியாகவே இது பார்க்கப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பாரம்பரியச் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு, இன்னொரு சமூகம் தலைமை தாங்குவது, எவ்வளவு தூரம் ஏற்புடையது என்ற கேள்வி ஒருபுறமிருக்கட்டும். ஆனால், நிச்சயமாக ஒரு கடைந்தெடுத்த இனவாதி, சட்டத்தையும் நீதிப்பொறிமுறையையும் மதிக்காத காரணத்தால், நீதிமன்றால் குற்றவாளியாகக் காணப்பட்டதொரு குற்றவாளி, தலைமை தாங்குவது ஏற்புடையதல்ல.

இது பேரினவாதம், சிறுபான்மையினரை அடக்குமுறைக்கு உள்ளாக்கும் இன்னொரு நடவடிக்கையாகவே, பார்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

அவனும் அவளும் நல்ல அன்பான காதலர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், அவனை விட வசதியான ஒருவனை அவள் பெற்றோர்கள் பேசியபோது, அவள் சம்மதித்தாள்.

அவர்களின் திருமணம் நடந்தேறிய பின்னர், கணவனுடன் வெளிநாடு சென்றுவிட்டாள். தனது காதலியின் பிரிவால் கலங்கியவன், திருமணம் செய்துகொள்ளாமலே தனிக்கட்டை ஆனான்.

வருடங்கள் பல கடந்தன. அவள், தனது கணவனுடன் ஊருக்கு வந்தாள். எதிர்பாராத வகையில் அவன், அவளைக் குடும்பமாகக் கண்டு, ஒருகணம் அதிர்ச்சியடைந்து, மறுகணம் சுதாகரித்துக் கொண்டான். அவனைக் கண்டதும் அவள், அருகில் வந்து பேச்சுக் கொடுத்தாள்.

பிள்ளைகளுடன் வந்தவளை அன்புடன் நோக்கியவனை, "நன்றாக இருக்கிறாயா?" எனக் கேட்டாள்.

"ஆம்" என்று சொன்னவனை உற்று நோக்கிய அவள், "உங்களுக்கு இன்னும் திருமணமாகவில்லை என்பதை அறிந்து, கவலையுற்றேன்" என்றாள்.

"எனக்கு ஒன்றுமில்லை! நீ சந்தோசமாக இரு" என்றான் அவன். பின்னர் திரும்பி நடந்தான்.

அவள் நன்றாக இருக்கட்டும் என்று எண்ணியபடி படுத்தவன், அன்றிரவு நிம்மதியாக உறங்கினான்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கன மழையால் கிண்ணியா விவசாயிகளின் சோகம்



தற்போது பெய்து கொண்டிருக்கும் மழை காரணமாக, கிண்ணியாவின் புளியடிக்குடா, பக்கிரான் வெட்டை, வன்னியனார் மடு வயல் பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வீதிகளும் சுமார் 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்களும் அணைக்கட்டுகளும் சேதமடைந்து அழிந்து கொண்டிருப்பதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதான வடிச்சல் ஆற்றைக் குறுக்காக மறித்துக் கட்டியதன் மூலமே, வயல்களுக்கு நீர் பாய்ச்சுகின்றார்கள். அதிக மழை பொழிகின்ற போது, குறுக்காகக் கட்டப்பட்ட மறிப்பால் ஆறு பெருக்கெடுத்து, வெள்ளம் ஏற்படுவதால், விவசாயிகள் துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

ரெகுலேற்றர் பொறிமுறை இல்லாமை காரணமாகவே, இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே, விவசாய அமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் இதில் கரிசனை கொண்டு, உடனடியாக ரெகுலேட்டர் பொறிமுறையை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

ஹஸ்பர் ஏ ஹலீம்




இலங்கையை நிலைநிறுத்துவதற்கான உறுதிமொழியில்

# SLASSCOM தொழிற்றுறையை ஒன்றிணைக்கிறது

SLASSCOM, அதன் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) முன்முயற்சியை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை மற்றும் குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் ஸ்ரீ லங்காவுடன் இணைந்து வெளியிட்டது. இந்த அமர்வில், தொழில்துறையின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோரின் மதிப்புமிக்க பார்வையாளர்கள் பங்குபற்றினர். அவர்கள் கூட்டாக "உலகளாவிய ரீதியில் அங்கிரிக்கப்பட்ட முன்னணி நிலையான IT/BPM இலக்காக இலங்கையின் தொழிற்றுறையை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவோம்" மற்றும் "அனைத்து நிறுவனங்களின் செல்வாக்கு மண்டலங்களில் சுற்றுச்சூழல், சமூகம், நிர்வாகத்தை கற்றல், முன்னுரிமை அளித்தல், வெற்றி பெறுதல்" என்ற வரலாற்று உறுதிமொழியை வழங்கினர்.

SLASSCOM ஆனது இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் மற்றும் தொழில்துறைக்கு உள்ளேயும் வெளியேயும் பல பங்குதாரர்களுடன் இணைந்து ESG மூலோபாயத்தை உருவாக்க ஒரு நிபுணர் ஆலோசனைக் குழுவுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

முன்னோக்கிச் செல்லும்போது, ESG மூலோபாயம் தொழில்துறையின் ஒட்டுமொத்த பல ஆண்டு மூலோபாயத்தில் உட்பொதிக்கப்படும். ஆலோசனைக் குழு மற்றும் ஒரு செயல்பாட்டு நிர்வாகக் குழு நிறுவப்பட்டுள்ளது. இதில் தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் கார்ப்பரேட் நிலைத்தன்மை நிபுணர்கள் நிலைத்தன்மை உத்தியின் வளர்ச்சி மற்றும் செயல்படுத்தலை ஆதரிக்கின்றனர்.

SLASSCOM இன் தவிசாளர் சாண்ட்ரா டி சொய்சா ESG தொடர்பான தனது பார்வையைப் பகிர்ந்து கொண்டார், "நமது மண்ணையும் நமது மக்களையும் பாதுகாப்பதில் நாம் அனைவரும் பொறுப்பேற்கிறோம். இது இனி ஒரு விருப்பமல்ல; ஆனால் கட்டாயமானது. வெற்றிபெற நாம் கூட்டாக செயல்பட வேண்டும். இலங்கையின் 'புத்திசாலித்தனத்தின் தீவு' குறியீட்டு முன்மொழிவை மேலும் வலுப்படுத்த, ESG தொழில்துறையின் முக்கிய வேறுபாடுகளில் ஒன்றாக இருப்பதைக் காண SLASSCOM ஆர்வமாக உள்ளது" என்றார்.

**இது புத்தாக்கம் மற்றும் திறமைக்கு மட்டுமல்ல, காலநிலை நடவடிக்கை, பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கு வழி.வகுக்கும் பொறுப்பான, கொள்கை ரீதியான வணிகத்திற்கும் பெயர் பெற்றதுடன், வளர்ச்சியை உள்ளடக்கியது**

மேலும், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல், விதிவிலக்கான மதிப்பை வழங்கும் போது. இது நமது குறியீட்டை மற்றவர்களால் ஒப்பிட முடியாது. உலக வரைபடத்தில் நம்மை முன்னணியில் வைக்கும். முன்னோக்கிச் செல்ல, SLASSCOM ஆனது IT/BPM தொழில்துறைக்கான வணிகப் பொறுப்பு அறிக்கையிடலை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது SDG திசைகாட்டி உட்பட நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில்துறைக்கு பொருத்தமான அளவீடுகளின் தொகுப்புடன் பரிந்துரைக்கப்படுகிறது என்றார்.

SLASSCOM இன் துணைத் தலைவர் ஜெஹான் பேரின்பநாயகம் கூறுகையில், "இலங்கையின் IT/BPM தொழிற்துறையானது உலகின் முதல் பசுமையான IT/BPM இலக்காக இருக்க முடியும் இது புத்தாக்கம் மற்றும் திறமைக்கு மட்டுமல்ல, காலநிலை நடவடிக்கை, பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கு வழி.வகுக்கும் பொறுப்பான, கொள்கை ரீதியான வணிகத்திற்கும் பெயர் பெற்றதுடன், வளர்ச்சியை உள்ளடக்கியது.

2025 ஆம் ஆண்டுக்குள் ஏற்றுமதி துறையில் 5 பில்லியன் டொலர் இலக்காக கொண்டு 1,000 தொடக்க நிலை நிறுவனங்கள் 200,000 திறமையான நிபுணர்களை வேலைக்கு அமர்த்தும் என, SLASSCOM உறுதியாக நம்புகிறது. நல்ல தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் பசுமையான IT/ BPM இலக்காக இலங்கையை கற்பனை செய்யும் ESG இல் தொழில்துறைக்கு ஒரு லட்சிய இலக்கு தேவைப்படுகிறது" என்றார்.

இந்த முயற்சிக்காக SLASSCOM ஐப் பாராட்டிய, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர், திருமதி ஹனா சிங்கர்-ஹம்டி தெரிவிக்கையில், "இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு, இலங்கை மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுக்கு சாதகமான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை உருவாக்கும் அதே வேளையில், அதன் வளர்ச்சியைத் தொடர உதவும், தொழில்துறை சார்ந்த நிலையான மூலோபாயத்தை உருவாக்குவதற்கு IT/ BPM தொழிற்துறையுடன் ஒத்துழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறது" என்றார்.

ஆசியா- பசிபிக் மற்றும் ஜப்பான் - SAP இன் மூலோபாய திட்டங்கள் அலுவலகத்தின் தலைவர், டிரிஸ்டன் ஹேபர்லி முக்கிய உரையை ஆற்றினார். உலகளாவிய ரீதியில் ESG இல் அதிகரித்து வரும் கவனத்தை எடுத்துக்காட்டியதுடன், இது இப்போது வணிகக் கட்டாயமாக முக்கிய முன்னுரிமையாக உள்ளதாக கூறினார்.

ஆடைத் தொழில்துறையின் தலைவர் நிகில் ஹிர்தராமணி, இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் வளர்ச்சிக்கான நிலைப்பாட்டில் நிலைத்தன்மையின் மீது வலுவான கவனம் செலுத்துவது எவ்வாறு முக்கியமானது என்பது மட்டுமல்லாமல், அதன் பல பங்குதாரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியது என்பது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

இதன்போது, SLASSCOM இன்று இரண்டு உறுப்பினர் நிறுவனங்களின் ஊக்கமளிக்கும் இரண்டு கருத்தாடல்கள் இடம்பெற்றன. இவர்கள் இருவரும் ESG ஐ முன்னேற்றுவதற்கு அதிகம் செயற்பட்டுள்ளதுடன், பொறுப்பான வணிகத்தின் மீது ஆர்வமுள்ளவர்கள். அவர்கள் Virtusa Corp மூத்த துணை தலைவர் டென்வர் டி சில்வா, மற்றும் Dialog Axiata PLC இன் தலைவர் சரித ரத்வத்த Jr. ஆகியோர் ஆவர்.

மன்றத்தின் பேச்சாளர்கள் அடங்கிய குழு கலந்துரையாடல், குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் ஸ்ரீ லங்காவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராதிகா டி சில்வாவினால் நெறிப்படுத்தப்பட்டது.

SLASSCOM துணைத் தலைவர் ஜெஹான் பேரின்பநாயகம் தலைமையிலான உறுதிமொழியுடன் இந்த முக்கியமான நிகழ்வு நிறைவு பெற்றது.

மும்பை

# ஆர்யன் கானுக்கு நிபந்தனைகளுடன் பிணை

போதைப்பொருள் வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்ட ஷாருக்கான் மகனுக்கு 14 நிபந்தனைகளை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. பிணை நடைமுறைகள் முடியாததால் அவர் சிறையில் இருந்து வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது.



மும்பை - கோவா சொகுசு கப்பலில் போதை பொருள் தடுப்பு பிரிவினர் அதிரடி சோதனை நடத்தினர். சோதனையில் போது கப்பலில் போதை விருந்து நடந்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து வழக்கில் பிரபல நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் ஆர்யன் கான் மும்பை ஆர்தர் ரோடு பிணையில் அடைக்கப்பட்டார். பிணை கேட்டு ஆர்யன் கான், அவரது நண்பர் அர்பாஸ் மெர்சன்ட், மாடல் அழகி முன்முன் தமேச்சா ஆகியோர் தாக்கல் செய்த மனுவை மாஜிஸ்திரேட்டு, சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்து இருந்தது.

இந்தநிலையில் ஆர்யன் கான் உள்ளிட்ட 3 பேருக்கும் மும்பை நீதிமன்றம் பிணை வழங்கியது. ஆனால் தீர்ப்பின் விவரம் வெளியிடப்படாததால், அவர் உடனடியாக சிறையில் இருந்து வெளியே வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

நீதிபதி, பிணை மனு மீதான தீர்ப்பின் விவரத்தை அறிவித்தார். அதில் ஆர்யன் கான் உள்ளிட்ட 3 பேருக்கும் 14 நிபந்தனைகளை நீதிமன்றில் விதித்து உள்ளது.

புதுடெல்லி

## தொழில் அதிபர்களுக்காகவே செயற்படுகிறார் பிரதமர் மோடி



பிரதமர் மோடி தனது நெருங்கிய தொழில் அதிபர்களான 5 அல்லது 6 பேரின் நலன்களுக்கு மட்டுமே பணியாற்றிவருகிறார். எந்தவொரு விஷயமாக இருந்தாலும் அந்த தொழில் அதிபர்களுக்கு சாதகமாக மட்டுமே பிரதமர் நடந்து கொள்கிறார்.


இவ்வாறு, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, கோவாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,கோவா மாநிலத்தை தற்போது நிலக்கரி இறக்குமதி மையமாக மாற்றி இருக்கிறார்கள். மர்மமாக கோவா துறைமுகத்துக்கு நிலக்கரிகள் கொண்டு வரப்பட்டு அந்த பகுதி முழுவதும் சுற்றுச்சூழல் சீர்கேடு அடைய செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக மீனவர்கள் பல்வேறு புகார்களை என்னிடம் தெரிவித்தனர். மோடிக்கு வேண்டிய தொழில் அதிபர்களுக்காகத்தான் நிலக்கரி இறக்குமதி இங்கு நடக்கிறது.இவ்வாறு ராகுல்காந்தி கூறினார்.

சென்னை

## "தி.மு.கவின் மாறுபட்ட வேடங்கள்"



எதிர்க்கட்சியாக இருக்கும்போது விவசாயத்துக்கு ஆதரவானவர்கள் போலக் காட்டிக்கொண்டு வசனம் பேசுவதையும் ஆட்சிக்கு வந்ததும் விவசாயத்துக்கு எதிரான திட்டத்துக்குக் கையெழுத்து போடுவதையும் திராவிட முன்னேற்ற கழகம் வாடிக்கையாக வைத்திருக்கிறது என்று டிடிவி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து, அம்மா மக்கள் முன்னேற்ற கழக (அ.ம.மு.க) பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

காவிரி டெல்டாவில் புதிய பெட்ரோகெமிக்கல் நிறுவனங்களை உருவாக்குவதற்கான ஏல அறிவிப்பைத் தமிழக அரசாங்கம் வெளியிட்டு இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது என்றார்.

பெங்களூர்

## தினமும் உடற்பயிற்சி, நடைபயிற்சி; திடீர் மரணம்?



நடிகர் புனித் ராஜ்குமாருக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக மரணம் அடைந்தார்.

அவரது மறைவு கர்நாடகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவரது கடைசி நேர பரபரப்பு நிமிடங்கள் குறித்து குடும்ப டொக்டர் ரமண ராவ் பெங்களூரில் நிருபர்களிடம் கூறியதாவது:

நடிகர் புனித் ராஜ்குமார், தனது மனைவி அஸ்வினியுடன் இரண்டு தினங்களுக்கு முன் எனது ஆஸ்பத்திரிக்கு வந்தார். ஏன் வியர்வை அதிகமாக உள்ளது என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், 'நான் இப்போது தான் உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சி முடித்துவிட்டு வருகிறேன், அதனால் வியர்க்கிறது. ஆனால் எனக்கு உடல் சோர்வாக உள்ளது' என்று கூறினார்.

எனக்கு சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அவருக்கு ECG பரிசோதனை செய்தேன். அவரது இதய செயல்பாட்டில் மாறுபாடு இருந்தது. ஆனால் அப்போது அவருக்கு மாரடைப்பு ஏற்படவில்லை. உடனே ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டும் என்று நான் அறிவுறுத்தினேன்.

அவருக்கு ஏற்பட்டது மாரடைப்பு கிடையாது. மாரடைப்பு ஏற்பட்டால், அதனால் அதிகப்படியான வலி ஏற்படும். ஆனால் அவருக்கு வலி இருக்கவில்லை. 'கார்டியாக் அரெஸ்ட்' அதாவது இதய துடிப்பே நின்றுபோவது. அது தான் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அவர் தினசரி உடற்பயிற்சி செய்து, ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தினார். அவருக்கு இத்தகைய பிரச்சினை இருக்கும் என்ற சந்தேகம் யாருக்கும் ஏற்படவில்லை என்றார்.

திருச்செந்தூர்

## சூரசம்ஹார விழாவுக்கு அனுமதி இல்லை



திருச்செந்தூர் முருகன் கோவிலில் நடக்கும் சூரசம்ஹார விழா, உலக பிரசித்தி பெற்றது. இந்தாண்டு சஷ்டி திருவிழா, நவம்பர், 4ஆம் திகதி தொடங்கி 15ஆம் திகதி நிறைவடையும். நவம்பர், 9ஆம் திகதி சூரசம்ஹாரம்; அடுத்த நாள் திருக்கல்யாண உற்சவம் நடக்கும். இந்த இரண்டு முக்கிய தினங்களில் நடக்கும் நிகழ்வுகளில் பங்கேற்க, மக்களுக்கு அனுமதி இல்லை என்று தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்து கோவில் திருவிழாக்களுக்கு மக்கள் கூடி விட்டால், கொரோனா பரவல் அதிகரிக்கும் என்று, அரசாங்கம் கூறுகிறது. ஆனால், தீபாவளியையொட்டி, நடிகர் ரஜினியின், 'அண்ணாத்த' படம் ஆயிரத்திற்கும் அதிகமான தியேட்டர்களில் ரிலீசாகிறது. இதற்காவே தியேட்டர்களில் 100 சதவீத இருக்கைகளை நிரப்ப அனுமதி அளித்துள்ளனர்.

சென்னை

ரஜினிகாந்துக்கு திடீரென உடல்நலக்குறைவு

## ஸ்டாலின், வைரமுத்து சுகம் விசாரிப்பு





நடிகர் ரஜினிகாந்துக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.தலைவலி மற்றும் லேசான மயக்கம் காரணமாக சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக ரஜினிகாந்த் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில், நடிகர் ரஜினிகாந்துக்கு மூளைக்கு செல்லும் இரத்தக்குழாயில் சிறிய அடைப்பு கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அதை நீக்குவதற்கான முயற்சியில் டொக்டர்கள் ஈடுபட்டனர். சிகிச்சை மூலம் அடைப்பு சரிசெய்யப்பட்டது. தற்போது, ஆஸ்பத்திரியிலேயே ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்நிலையில் காவேரி மருத்துவமனைக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடிகர் ரஜினிகாந்திடம் உடல்நலம் பற்றி விசாரித்தார்.

இந்நிலையில் கவிஞர் வைரமுத்து தனது டுவிட்டர் பதில்,

'காவேரி மருத்துவமனை நிறுவனரிடம் ரஜினியின் நலம் கேட்டேன்; நாளுக்கு நாள் நலம் கூடிவரும் நம்பிக்கைத் தகவல்கள் என் நிம்மதியை மீட்டெடுத்தன. உத்தமக் கலைஞனே காற்றாய் மீண்டு வா, கலைவெளியை ஆண்டு வா, படையப்பா எழுந்து வா, பாட்ஷாபோல் நடந்து வா, வாழ்த்துகிறேன்' என்று பதிவிட்டுள்ளார்.

LkNewspapers Viber Community

பெரு

# பெருவில் தங்க சுரங்கத்திற்கு தீ வைப்பு

பெருவில் 'சுரங்கங்களால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து அந்நாட்டு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (30) அயகச்சு மாகாணத்தில் உள்ள அபுமயோ (Apumayo) தங்க சுரங்கத்தின் முன் திரண்ட 500 க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அச் சுரங்கத்திற்கு தீ வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் விபத்தில் 10 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





அமெரிக்கா

## ஐ.நா வில் பிரசாரம் செய்யும் டைனோசர்

மெய்நிகர் தொழில்நுட்பத்தில் (Virtual Technology) உருவாக்கப்பட்டுள்ள டைனோசர் ஒன்று "பருவநிலை குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற ஐ. நா பொதுச் சபைக் கூட்டத்தின் போதே ஃபிரான்கி தி டைனோ (Frankie the Dino) என்று அழைக்கப்படும் குறித்த டைனோசரானது "'அழிவைத் தேர்ந்தெடுக்காதே', சாக்குப்போக்குகள் சொல்வதை நிறுத்திவிட்டு, மாற்றங்களைச் செய்யத் தொடங்கவும்" போன்ற கருத்துக்களை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு நடிகர் ஜக் பிளாக்(Jack Black) குரல் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ஸ்டிக்கர் வடிவில் தடுப்பூசி



ஸ்டிக்கர் வடிவிலான தடுப்பூசிகளை அமெரிக்காவின் குவீன்ஸ்லாந்து( Queensland) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக்குழுவினர் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தின் வைராலஜி நிபுணரான டேவிட் முல்லர் உள்ளிட்டோர் அடங்கிய ஆய்வுக் குழுவினரே இத் தடுப்பூசி குறித்த ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து முல்லர் கருத்துத் தெரிவிக்கையில் "தாம் கண்டுபிடித்த ஸ்டிக்கர் தடுப்பூசி சிறப்பாக செயற்படுகின்றது. இது மருத்துவத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தும், இனிமேல் ஊசியைக் கண்டு பயப்படுவோர், குறிப்பாக குழந்தைகளுக்கு இந்த ஸ்டிக்கர் தடுப்பூசி வரப்பிரசாதமாக அமையும்"என்றார்.அத்துடன் "அதில் நமது கண்ணுக்குத் தெரியாத வகையில் 5000 நுன் ஊசிகள் இடம் பெற்றிருக்கும். இதை நமது தோள்பட்டையில் ஒட்டும்போது நமக்கு வலி எதுவும் தெரியாது. இந்த நுன் ஊசிகள் மூலம் தடுப்பு மருந்து நமது உடலுக்குள் இலகுவாக செலுத்தப்படும். இந்த ஸ்டிக்கரை நமது உடலில் ஒட்டும்போது, உடம்பை லேசாக கிள்ளும்போது ஏற்படும் அதே அளவிலான உணர்வு மட்டுமே ஏற்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



ஸ்பெயின்

## சொக்லெட், ஐஸ் கிரீம், விளம்பரங்களுக்குத் தடை

ஸ்பெயில் சிறுவர்களைக் குறிவைக்கும் அதிக அளவு இனிப்புக் கொண்ட உணவுப்பொருட்களின் விளம்பரங்களைத் தடைசெய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை உட்பருமன் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பதற்காவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தீர்மானத்தை அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், இது தொலைக்காட்சி, வானொலி, இணையம், செயலி ஆகியவற்றில் இடம்பெறும் விளம்பரங்களுக்கும் பொருந்தும் என்றும் அந்நாட்டின் வாடிக்கையாளர் விவகார அமைச்சர் அல்பர்டோ கார்ஸன் (Alberto Garzon) தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## மின் சிகரெட்டை பரிந்துரைக்கும் பிரித்தானியா




புகைப்பிடிக்கும் பழக்கத்தை-குறைக்க மற்றும் நிறுத்த முயற்சி செய்பவர்களுக்கு மின் சிகரெட்டுகளைப் பரிந்துரைக்க, மருத்துவர்களுக்கு அந்நாட்டு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் புகைப் பிடிப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் கடந்த 2019ஆம் ஆண்டில் இதனால் 64,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புகையிலை புகைப்பதைவிட மின் சிகரெட்டுகளைப் பிடிப்பில் ஆபத்துகள் குறைவாகக் காணப்படுவதால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின் சிகரெட்டுகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள், அவற்றைச் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், சோதனைக்குப் பின், அந்நாட்டின் தேசியச் சுகாதாரச் சேவையின்கீழ், மின் சிகரெட்டுகளைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா


## பேயைக் காதலித்துப் பேயாக மாறும் பாடகி

பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல பாடகியான ப்ரோகாட் (Brocarde ) என்பவர் "தான் பேய் ஒன்றைக் காதலித்து வருவதாகத் தெரிவித்துள்ளமை " பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

34 வயதான இவர் அண்மையில் ஊடகமொன்றிக்கு அளித்த செவ்வியின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "நான் அண்மைக் காலமாக ஒரு பேயைக் காதலித்து வருகிறேன். எனினும் பேயுடன் எனக்கு ஏற்பட்ட காதலை வெளி உலகிற்கு தெரியப் படுத்தியதால் எனது பேய் காதலன் தற்போது என்னையும் பேயாக மாற்றி வருகிறார்.

என்னால் சில அமானுஷியங்களை உணர முடிகின்றது. இதனால் முன்பு போல் என்னால் இருக்க முடியவில்லை. நான் பேயாக மாறி வருவதை என்னால் முழுமையாக உணர முடிகிறது" என்றார்.





உலகக் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இங்கிலாந்து



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 125/10 (20 ஓவ. ) (பந்துவீச்சு: கிறிஸ் ஜோர்டான் 3/17 (4), கிறிஸ் வோக்ஸ் 2/23 (4), லியாம் லிவிங்ஸ்டோன் 1/15 (4), அடில் ரஷீட் 1/19 (4))

இங்கிலாந்து: 126/2 (11.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜோஸ் பட்லர் ஆ.இ 71 (32) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்தன் அகர் 1/15 (2.4))

போட்டியின் நாயகன்: கிறிஸ் ஜோர்டான்

இதேவேளை, ஷார்ஜாவில் நடைபெற்ற மற்றைய குழு ஒன்று போட்டியில் இலங்கையை தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இங்கிலாந்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## வெரோனாவிடம் தோற்ற ஜுவென்டஸ்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில், ஹெலாஸ் வெரொனாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜுவென்டஸுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் அவ்வணி வென்றது.

வெரோனா சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜியோவனி சிமியோன் பெற்றதோடு, ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை வெஸ்டன் மக்கென்னி பெற்றிருந்தார்.

இந்நிலையில், அத்லாண்டாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், லேஸியோவுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. அத்லாண்டா சார்பாக, டுவான் ஸப்பட்டா, மார்டென் டி றூன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லேஸியோ சார்பாக, பெட்ரோ, சிரோ இம்மொபைலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா –அலாவேஸ் போட்டி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில், பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், அலாவேஸுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை மெம்பிஸ் டிபே பெற்றதோடு, அலாவேஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூயிஸ் றியோஜா பெற்றிருந்தார்.

இந்நிலையில், இப்போட்டியில் நெஞ்சு உபாதைக்குள்ளான சேர்ஜியோ அகுரோ, வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## பலஸிடம் தோற்ற சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் கிறிஸ்டல் பலஸ் வென்றது.

பலஸ் சார்பாக, வில்ஃபிரைட் ஸாகா, கொனர் கல்லக்ஹர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக, கிறிஸ்டியானோ ரொனால்டோ, எடின்சன் கவானி, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. லிவர்பூல் சார்பாக, ஜோர்டான் ஹெண்டர்சன், சாடியோ மனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, பிறைட்டன் சார்பாக, எனோச் மவப்பு, லியனார்டோ ட்ரோஸார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

தவிர, லெய்செஸ்டரின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றிருந்தது. ஆர்சனல் சார்பாக, கப்ரியல், எமிலி ஸ்மித் றோவே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.





ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் உள்ள

## விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

■ க. விஜயரெத்தினம்



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் உள்ள ஐந்து விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு, ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி. சத்தியானந்தி நவசிவாயம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கே இவ்வாறு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சந்திரகாந்தனிடம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ. பிரசாந்தன் முன்வைத்த வேண்டுகோளுக்கு அமைய, மண்முனைப்பற்று பிரதேசத்தின் ஆரையம்பதி திருநீற்றுக்கேணி, மாவிலங்கத்துறை, புதுக்குடியிருப்பு, கிரான்குளம் பிரதேசங்களைச் சேர்ந்த கழகங்களுக்கு 50,000 ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சந்திரகாந்தனின் செயலாளர் சட்டத்தரணி திருமதி. மங்களேஸ்வரி சங்கர், மண்முனைப்பற்று பிரதேச அமைப்பாளர் ஜெயகப் மற்றும் கிராமிய குழு தலைவர்கள் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 1 நவம்பர் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.